T THOOTHUKUDI Reg. No.:

# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2024

## வகுப்பு-10

காலம் : 3.00 மணி **சமூக அறிவியல்** மதிப்பெண்கள்:100

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14 x 1 = 14

1. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம்" எனக் கூறியவர் யார்?
அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன்யாட்சென் ஈ) மாசேதுங்

2. பெரு நாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக் கொண்டனர்?
அ) ஆங்கிலேயர் ஆ) ஸ்பானியர் இ) ரஷ்யா ஈ) பிரெஞ்சுக்காரர்

3. எப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தானது?
அ) ஜுன் 26, 1942 ஆ) ஜுன் 26, 1945 இ) ஜனவரி 1, 1942 ஈ) ஜனவரி 1, 1945

4. சீனாவில் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு எப்போது நடைபெற்றது?
அ) செப்டம்பர் 1959 ஆ) செப்டம்பர் 1949 இ) செப்டம்பர் 1954 ஈ) செப்டம்பர் 1944

5. கூற்று:ஜோதிபா புலே ஆதரவற்றோருக்கான விடுதிகளையும், விதவைகளுக்கான காப்பகங்களையும் திறந்தார்.
காரணம்: ஜோதிபா புலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை திருமணத்தை ஆதரித்தார்.
அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக இல்லை
ஆ) கூற்று சரி. காரணம் கூற்றுக்குப் பொருத்தமாக உள்ளது.
இ) இரண்டுமே தவறு.
ஈ) காரணம் சரி. கூற்று பொருத்தமற்றதாக உள்ளது.

6. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ..........
அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்

7. ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு .......... ஆகும்.
அ) சம மழைக்கோடுகள் ஆ) சம அழுத்தக்கோடுகள் இ) சமவெப்பக் கோடுகள்
ஈ) அட்சக்கோடுகள்

8. இந்தியாவில் தங்க இழைப் பயிர் என அழைக்கப்படுவது
அ) பருத்தி ஆ) கோதுமை இ) சணல் ஈ) புகையிலை

9. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?
அ) ஒருமுறை ஆ) இருமுறை இ) மூன்று முறை
ஈ) எப்பொழுதும் இல்லை

10. நடுவண் அரசின் அரசியலமைப்புத் தலைவர் .......... ஆவார்.
அ) குடியரசு தலைவர் ஆ) தலைமை நீதிபதி இ) பிரதம அமைச்சர்
ஈ) அமைச்சர்கள் குழு

11. மாநில அமைச்சரவையின் தலைவர் .........
அ) முதலமைச்சர் ஆ) ஆளுநர் இ) சபாநாயகர் ஈ) பிரதம அமைச்சர்

12. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது.
அ) வேளாண்மை ஆ) தானியங்கிகள் இ) வர்த்தகம் ஈ) வங்கி

13. காட் (GATT) ன் முதல் சுற்று நடைபெற்ற இடம் ........
அ) டோக்கியோ ஆ) உருகுவே இ) டார்குவே ஈ) ஜெனீவா

14. உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்ட ஒரே மாநிலம் .......
அ) கேரளா ஆ) ஆந்திரபிரதேசம் இ) தமிழ்நாடு ஈ) கர்நாடகா

II. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 10 x 2 = 20

15. சீன-ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?
16. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?
17. முத்து துறைமுக நிகழ்வை விவரி.

18. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?
19. இராமலிங்க அடிகளின் சீர்திருத்தங்கள் குறித்து குறிப்பு தருக.
20. தக்காண பீடபூமி – குறிப்பு தருக.
21. ஜெட் காற்றோட்டங்கள் என்றால் என்ன?
22. இந்தியாவின் மீன்வளர்ப்பு பிரிவுகளைப் பற்றி சுருக்கமாக குறிப்பு தருக.
23. இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக.
24. இடம் பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகளைக் கூறுக.
25. தேசிய அவசரநிலை என்றால் என்ன?
26. உச்ச நீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?
27. GDP –யின் முக்கியத்துவத்தை எழுதுக.
28. நியாயமான வர்த்தக நடைமுறைகளின் ஏதாவது இரு கோட்பாடுகளை எழுதுக.

**III.** எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 42க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 10 x 5 = 50

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
   1) சமூக ஜனநாயகக் கட்சியை நிறுவியவர் ..........
   2) இந்தியாவில் உற்பத்தி செய்யும் திட்டம் .......... இல் தொடங்கப்பட்டது.
   3) இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு ..........
   4) உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் .......... ஆண்டு அமலுக்கு வந்தது.
   5) ........... ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கியமான குறியீடாகும்.
30. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவரி.
31. அ) வேறுபடுத்துக.
   1) கடல்மீன் பிடிப்பு மற்றும் உள்நாட்டு மீன்பிடிப்பு
   2) புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலாத வளங்கள்

   ஆ) காரணம் கூறுக.
   வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு
32. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க.
33. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா சே துங்கின் பங்களிப்பை அளவிடுக.
34. இமயமலையின் உட்பிரிவுகளையும், அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.
35. தென் மேற்கு பருவக்காற்று குறித்து விளக்குக.
36. இந்திய தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி ஆய்ந்து எழுதுக.
37. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமைகள் பற்றி விவரி.
38. நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி திறனாய்வு செய்க.
39. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
40. பொது விநியோக முறையை விவரிக்கவும்.
41. 1920 முதல் 1950 வரை ஆண்டுக்கான காலக்கோடு வரைந்து 5 நிகழ்வுகளை குறிக்கவும்.
42. உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.
   1) கிரேட் பிரிட்டன் 2) ஆஸ்திரியா–ஹங்கேரி 3) ஹவாய் தீவு 4) ருமேனியா 5) இத்தாலி

**IV.** அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 2 x 8 = 16

43. அ) ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.

   (அல்லது)

   ஆ) நீர்பாசன முறைகளைப் பற்றி விவரி.
44. அ) இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.
   1) பன்னாட்டு விமானநிலையம் 2) மன்னார் வளைகுடா 3) கங்கை நதி
   4) ஹிராகுட் அணை 5) சணல் விளையுமிடம் 6) தார் பாலைவனம் 7) மலை மண்
   8) வட கிழக்கு பருவகாற்று

   (அல்லது)

   ஆ) இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.
   1) நேபாளம் 2) கோதுமை விளையும் இடம் 3) பாமீர் முடிச்சு 4) ஆரவல்லி மலை
   5) மேற்கு தொடர்ச்சி மலைத் தொடர் 6) மலைக்காடுகள் 7) தக்காண பீடபூமி
   8) தூத்துக்குடி

AMEER TUITION CENTRE
KAYALPATTANAM
PH: 9488005009

www.Padasalai.Net